Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹு கார்த்திகை மீ 02 உ ஞாயிற்றுக்கிழமை (18 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 29 ஓசை 264

## வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஜனசவிய திட்டம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசின் ''ஜனசவிய'' திட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கொழும்பு சென்று திரும்பிய யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இத்திட்டம் இப்பகுதிகளில் சகஜநிலை திரும்பியதுமே மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும், தற்போது இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில் எதுவித மாற்றமும் இருக்காது என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

# தி. மு. க. ஆட்சியைக் கவிழ்க்க மத்திய அரசு முயற்சி

(டில்லி)

தமிழ் நாட்டில் ஆட்சியிலுள்ள முதலமைச்சர் மு. கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முயற்சியில் சந்திரசேகரின் மத்திய அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு கவிழ்ந்தபின் மத்தியில் ஆட்சி அமைப்பதற்கு பேரம் பேசுவதில் ஈடுபட்ட சந்திரசேகரின் ஜனதா தளக் கட்சியினர் தாம் மத்தியில் ஆட்சி அமைக்க இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், அதன் தோழமைக் கட்சியான அ. இ. அ. தி. மு. க. வும் தமக்கு ஆதரவு அளிக்கும் பட்சத்தில் தமிழ்நாட்டு சட்டசபையைக் கலைப்பதற்கு தாம் வழி செய்வதாக தெரிவித்தனராம். இந்த அடிப்படையிலேயே இன்று தமிழ்நாட்டு சட்டசபையைக் கலைக்கும் விடயத்தில் மத்திய அரசு தீவிர முயற்சி எடுத்து வருவதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

அதேவேளை தமிழ்நாட்டில் ஆட்சிக் கவிழ்ப்பு நடைபெறும் என்பதை இந்திரா காங்கிரஸ் கட்சித் தமிழ் நாட்டு பிரிவுத் தலைவர் வாழப்பாடியும் குறிப்பால் உணர்த்தியுள்ளார். அதாவது மத்தியில் நடைபெற்றதுபோன்று ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெறும் வரை தான் ஓயப்போவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணம்

### றோம்

நேற்று நண்பகல் பலாலி சிறிலங்கா இராணுவத்துடனான மோதல் சம்பவம் ஒன்றில் றோம் (தர்மராசா றோம்) என்ற போராளி வீர மரணமடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஆஸ்பத்திரியில் மருந்துஇல்லை; நோயாளர்கள் ஏமாற்றம்

(மானிப்பாய்)

தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனை மானிப்பாய்க்கு இடம் மாற்றம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சென்ற பெரும்பாலான நோயாளர்கள் பலத்த ஏமாற்றமடைந்தனர்.

இவர்களைப் பரிசோதித்த டாக்டர்கள் அவர்களுக்குரிய மருந்தை எழுதிக்கொடுத்தனராம். இவர்கள் அதனைக் கொண்டுசென்று மருந்தகத்தில் கொடுத்தபோது அவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதிபெறவும்

(சாவகச்சேரி)

மாவீரர் நினைவு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதியில் தயாரிக்கப்படும் சகலகலைநிகழ்ச்சிகளும் நாளை 19-11-90 திங்கட் கிழமைக்குமுன் தென்மராட்சி கலை. கலாசார அவைக் காரியாலயத்தில் சமர்ப்பித்து முன்கூட்டியே அனுமதி பெறப்பட வேண்டுமென தென்மராட்சிக் கலை, கலாசாரக் குழு கேட்டுள்ளது.

## தமிழ்போராளிகளைஉளக்குவிப்பதை மத்திய அரசு கைகட்டிப் பார்த்திராது

- சந்திரசேகர்

(டில்லி)

''தமிழகத்தில் இலங்கைப் போராளிகளை ஊக்குவித்தால் மத்திய அரசு கைகட்டி சும்மா பார்த்துக்கொண்டிருக்காது'' என்று பிரதமர் சந்திரசேகர் தமிழக முதல்வர் மு. கருணாநிதியை எச்சரித்துள்ளார்.

தமிழ் நாட்டிலும், அஸாமிலும் சட்டமும், ஒழுங்கும் குலைந்துகொண்டிருக்கிறது. ஈழப்போராளிகள் தமிழகத்தில் சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் பங்கம் விளைவிக்கிறார்கள். தமிழக அரசு பகிரங்கமாகக் கடத்தற்காரருக்கும், போராளிகளுக்கும் உதவி செய்கிறது. படகுகளையும், கடத்தற் காரர்களையும் விடுதலை செய்துள்ளது. இவ்வாறு பிரதமர் சந்திரசேகர் மக்கள் அவையில் நம்பிக்கைப் பிரேர

(4ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

18-11-1989 ஆம் ஆண்டு வீர மரணமடைந்த முல்லை மாவட்டத் தளபதி மேஜர் தங்கேஸின் நிழற்படம்.

## ஷெல் வீச்சு

நேற்று நண்பகல் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து குடிமனைகளை நோக்கித் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை. (ச)

## கொழும்புசென்ற இளைஞர் வடபகுதி திரும்புகின்றனர்

(வவுனியா)

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பு சென்ற மக்களில் பலர் மீண்டும் வடபகுதி வரும் நோக்குடன் வவுனியாவிற்கு வந்து குவிவதை அவதானிக்க முடிகிறது.

கொழும்பில் இடவசதி பற்றாக்குறையினாலும், அகதி முகாம்களில் இயக்கக்குழுஒன்றினால் பல இளைஞர்கள் வற்புறுத்தப்பட்டு இணைக்கப்படுவதினாலும் பலர் மீண்டும் வடபகுதிக்கு வந்து சேர்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மின்விநியோகத்தை தடைசெய்ய மின்சாரத் தூண்களின் கீழ் இராணுவத்தின் மிதிவெடிகள்

(வவுனியா)

வவுனியா தமிழ்க் கிராமப் பகுதிகளுக்கு மீண்டும் மின்சாரம் வழங்க முடியாதிருப்பதாக மின்சார சபையுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் தெரிவித்தார்.

மூன்றுமுறி / மதகுவைத்தகுளம் பகுதியில் உள்ள மின் இணைப்பைத் துண்டித்துள்ள இராணுவத்தினர் மீண்டும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தகவல் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள தத்தம் உறவினர்களின் நிலைபற்றி அறிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தவர்களுக்கு தற்போது செய்தி அறிவிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்கள் பற்றிய தகவல்களை அறிய விண்ணப்பித்த யாழ். மாவட்டத்தில் உள்ளவர்களுக்கான செய்திகள் தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

## முல்லையில் யானை தாக்கி ஒரேகுடும்பத்தில் இருவர்பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வல்லிபுரம் என்ற கிராமத்தில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒரே குடும்பத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் திருமதி ஆறுமுகம், இவரது ஆறுவயது மகன் ஆகிய இருவரும் பலியாகியுள்ளனர்.

சம்பவதினம் இரவு காட்டுப் பகுதியில் இருந்து மேற்படி கிராமத்திற்குள் யானைஒன்று புகுந்து வெறியாட்டம் நடத்தியபோதே இந்த இருவரும் கொல்லப்பட்டனர். (க)

## ஒரு மாத காலத்துக்கு வருமானத்தின் எல்லை கருதாமல் இலவச உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட மக்களுக்கு வருமான எல்லைகளைக் கருத்தில் எடுக்காமல் சகலருக்கும் நான்கு வாரகால விசேட இலவச உலர் உணவு வழங்கப்பட உள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கொழும்பு சென்று ஜனாதிபதி பிரேமதாஸாவுடனும் அரசின் முக்கிய அதிகாரிகளுடனும் யாழ். மாவட்டத்தின் அத்தியாவசிய சேவைகள் சீர்குலைந்திருப்பதையும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்திய போதே இம் முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணங்களை விட விசேடமாக இந்த நிவாரணம் வழங்கப்பட உள்ளது.

தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணமும் தற்காலி

(4ஆம் பக்கம் பார்க்க)

## குளவி கொட்டியதனால் வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் ஆஸ்பத்திரி வீதி பேக்கரி ஒழுங்கையைச் சேர்ந்ததிரவியம்என்ற வயோதிபர் குளவிகொட்டியதனால் நேற்றுமுன் தினம்காலைமரணமானார். பனை ஓலையுடன் கை ஒழுங்கையில் விழுந்த பாரிய குளவிக்கூடு வீட்டு உரிமையாளர்வெளிநாடொன்றில் வாழ்வதால் கவனிப்பாரற்றுக் கிடந்தது. வீட்டிற்கு காவலாளியாக நியமிக்கப்பட்டவரும் வீட்டு பனையிலிருந்து விழுந்த குளவிக்கூட்டை எரிக்கமுயற்சி எடுக்காமல் அசட்டையாக இருந்துவிட்டார். நேற்றுக் காலை அவ் வழியால் சென்ற வயோதிபர் குளவிக் கூட்டில் இடறுப்பட்டுக் குளவிகளினால் துரத்திக் கொட்டப்பட்டு பரிதாபகரமாக மரணமானார்.

## மடு அகதிமுகாம் அகதிகள் ராணுவநடவடிக்கையால் அச்சம்

(வவுனியா)

மன்னார் மாவட்டத்தில் அரசபடையினரால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அடுத்து மடுக்கோயில் அகதி முகாமில் தங்கியுள்ள மக்கள் மத்தியில் பீதிநிலை ஏற்பட்டுள்ளது.

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த அகதி முகாமிலிருந்து ஏராளமான அகதிமக்கள் வேறு பல இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்வதை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியிலிருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உபதபால் அலுவலகத்துக்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B 1580)

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்! எமது ஸ்தாபனம் மீண்டும் 60, ஸ்ரான்லி வீதியில் நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங்களும், பற்றறிகளும் விற்பனைக்குண்டு. கிளை ஸ்தாபனம்: 153A, பலாலி வீதியிலும் நடைபெறுகின்றது. (B/1586)

### தேவை

வெற்று சிமெந்து, கோழித்தீன் பைக்கற்றுக்கள் தேவைக். மில்க்வைற் - யாழ்ப்பாணம். (B/1597)

### 'இருள் இரவில் அல்ல'

மீரா வெளியீடு 'முடிவல்ல ஆரம்பம்' நாவலாசிரியர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதியது. (146, பக்கங்கள்) 45- ரூபா. புதிய அனுபவத்தினை தருகிறது. இந்நாவல் விற்பனையாகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம். திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். (R-842)

### மொழிபெயர்ப்பாளர் எழுத்தாளர் தேவை

ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்பாளர்களும் எழுத்துத்துறை அனுபவமுள்ளவர்களும் உடன் தேவை. அனுபவம், தகைமை, வயது குறித்து விபரமாக எழுதவும். விளம்பர இலக்கம் 100 மே/பா ஈழநாதம். (R 847)

### கல்வி

G.C.E(OL) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் தொடர் வகுப்புக்கள் மூலம் 20 நாட்களிலிருந்து ஒருமாதத்திற்குள் சாதாரண, திறமைச் சித்திக்கும், ஒரு மாதத்திலிருந்து ஒன்றரை மாதத்திற்குள் விசேட, திறமைச் சித்திக்கும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி (R-844)


## மாவீரர்தின நடவடிக்கைகள்

இம் மாதம் இருபத்தொராம் திகதி முதல் இருபத்தேழாம் திகதி வரை தமிழீழப் பகுதி எங்கும் கொண்டாடப்பட இருக்கும் மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவினர் விடுதலைப்போராட்டத்தில் இது வரை வீரமரணமடைந்த வீராங்கனைகளின் உருவப்படங்களை புங்குடுதீவு கந்தசுவாமி கோவிலடியில் வைத்து அஞ்சலி செலுத்த உள்ளதுடன் இப் பகுதியில் தேசியக் கொடிகளைப் பறக்க விடுவதோடு விடுதலை கீதங்களை இசைத்து மாவீரர் தினத்தை கொண்டாடத் திட்டமிட்டுள்ளனர். (22)

## சனசமூக நிலையங்களுக்கு 4,10,000 ரூபா ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள சமூனசக நிலையங்களுக்கு வழங்கவென ரூபா 4,10,00 துக்கான ஒப்புதல் உள்ளூராட்சி சபை அலுவலகத்திற்கு வந்துள்ளது.

இந்த தொகையை அந்தந்த சனசமூக நிலையங்களுக்கு அவற்றின் தரத்திற்கு ஏற்றவாறு வழங்க பின்பு தீர்மானிக்கப்படும், என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (லோ)


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செ. இளங்குமரன்
(குஞ்சுத்தம்பி)

மலர்வு 14-02-76 | உதிர்வு 18-11-85

ஐயா, நீ எம் உள்ளத்தில் அமர்ந்து ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்து விட்டன. நீ இன்று இருந்தால் ஒரு வீரனல்லவா?

உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கல்வயல்,
சாவகச்சேரி.

பெற்றோர், சகோதரன்,
சகோதரிகள்,
(B/1573)

## 20-வது பிறந்த நாளும் 104வது நாள் நினைவஞ்சலியும்

தமிழீழ மண்ணில் மலராய் 17-11-1970



கோட்டையில் வரலாறாய் 05-08-1990

வீரவேங்கை மாதுரி

''தோள் கொடுத்தவர் நம்மவர்
மாளப் போனதிருநாட்டை வாழ வைக்கத்
துணை நின்றோர் நம்மவர்'' என்பதற்கமைய
கோட்டையிலே கொடியேற்றி கொடியோரை விரட்டிட
களம் புகுந்த எம் வீர வேங்கையே
உன் வழி நாம் தொடர்வோம்

05-08-1990 அன்று கோட்டையிலே இவருடன் வீரமரணமடைந்த மற்றும் 27 வீர வேங்கைகளுக்கும் எமது இதய அஞ்சலிகள்.

மாமாமார், மாமி, அத்தை, சகோதரி,
மைத்துனன், மைத்துனிமார் விந்தன்,
அப்பாச்சி, ஆகியோர்.
(R/845)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



ஆறுமுகம் பசுபதி
(ஓய்வுபெற்ற இ. போ. ச. ஊழியர்)

மலர்வு 24-03-40 | உதிர்வு 09-10-90

குற்றமற்ற குணத்தவரே
நீர் செய்த குற்றம்மென்ன?
சற்றுமெதிர் பாராது
சடுதியாய் சாய்ந்ததென்ன?
பெற்று எமை விட்டுவிட்டுப்
பெருந்தூரம் சென்றீரோ!
விற்றுவரச் சென்ற உமை
விமானப்படை விழுங்கியதோ!
பற்று வைத்த எங்களையும்
பாராமல் சென்றீரோ!

கற்றவரும் கலங்கி நின்றார்
கருணையுள்ள மனிதர் நீர்
மற்றவரும் மனங் கொதித்தார்
மாசில்லா மனிதர் நீர்

பற்றோடு, இவர் இறுதி
பாதை வழி செல்லும் வரை
நற்பணி செய்தவர்க்கு
நவில்கின்றோம் நன்றிதனை,
உற்ற உங்கள் ஆத்மாவிற்கு
உரைக்கின்றோம சாந்திகள் பல.

பிரிவுத்துயரில்,
இராஜகாரியர் வீதி, மனைவி, மக்கள்,
மானிப்பாய். உற்றார், உறவினர், நண்பர்கள்
(B/1601)

## 16 ஆம் நாள் இதய அஞ்சலி



வீரவேங்கை டில்லி
(தேவதாஸ் - சாம்சன்)

தாயின் மடியில் 28-02-75 | தாயக மண்ணில் 03-11-90

தனையனவன் சிறிய தந்தை தங்கேஸ் வழியதனில்
எமது தமிழ்ஈழ மண்ணிற்கும் மக்களுக்கும்,
விடிவதனைப் பெறுதற்காய் வீரவேங்கையாய் மாறி
மடியும்வரை மாற்றான் படையுடன் போராடி
மாவிட்ட புரமதனில் மரணித்த டில்லியவன்
தோன்றிட்ட முல்லைமக்கள் தொடர்ந்திடுவீர் இவன்பாதை

மாதிரிக் கிராமம்
சிலாவத்தை
முல்லைத்தீவு

அன்புடன்
அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை
R/818

## சிந்தனைக்கு

இதுவரை நீ செய்தறியாததைச் செய்யும் ஆற்றல் பெறுவதே கல்வியின் பொருள்

— கே.பி.பால்மர்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 18-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# மண்ணை நேசிப்போரை அவமானங்கள் துரத்தாது

மூன்றாம் உலக நாடுகளின் வளங்களில் படித்துப் பட்டம் பெற்று நாட்டிற்குச் சேவை செய்யாமல் முதலாம் உலக நாடுகளை நோக்கி புத்திஜீவிகள், தொழில் நுட்பவியலாளர்கள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் வெளியேறுவது மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தளவில் பொதுப் பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. இந்த நிலை இன்று தமிழ்ப்பிரதேசங்களில் பெரியளவில் நிகழ்வது எமது சமுதாய வளர்ச்சியை பெரியளவில் பாதிப்படையச் செய்யக் கூடியதாகும்.

இன்று பல்கலைக்கழகத்திலிருந்து பாடசாலைகள்வரை விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் கல்வி நிறுவனங்களை சீராக இயக்குவதற்குச் சிரமமாக இருப்பதாகவும் துணைவேந்தர் தொடக்கம் அதிபர்கள் வரை தெரிவிக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்து குறிப்பாக மருத்துவபீடத்தில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை இன்று மட்டுமல்ல. பல்கலைக்கழகத்தில் அந்தப் பீடம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே இருந்து வருகின்றது. இன்று இந்த நிலைமை மோசமடைந்து பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை மூடுவதா என்ற கேள்வியை எழுப்பும் நிலையை உருவாக்கியுள்ளது. இந்நிலையில் மருத்துவபீடத்தில் சில பகுதிகளுக்கு உயிரியல் விஞ்ஞான சிறப்புப்பட்டதாரிகள் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இத்தனைக்கும் இலங்கையில் பெருமளவில் டாக்டர்களை உருவாக்கிய பிரதேசம் யாழ். மாவட்டமாகும். தெற்கு பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாண பாடசாலைகளின்பேரில் மாணவர்கள் இயங்கினார்கள் எனின் அந்தப் பல்கலைக் கழங்களில் இவர்கள் கொண்டிருந்த மாணவர் தொகையினைப் புரிந்து கொள்ளலாம், அன்று தெற்கு பல்கலைக்கழகங்களில் பெரும் பதவிகளையும் பெற்று இருந்தார்கள். அதேவேளை தெற்கில் பரவலாகக் கடமையும் புரிந்தார்கள். ஆனால் இன்று தமது இனத்திற்கு - மக்களுக்கு சேவை செய்ய எமது மண்ணில் டாக்டர்கள் இல்லை.

வைத்தியசாலைகளிலும், பல்கலைக்கழகத்திலும் டாக்டர்கள் இல்லாதது போன்றே இன்று பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டு வருவதாகத் தெரிகின்றது. அநேக ஆசிரியர்கள் பிரதேசத்தில் இருந்து வெளியேறியுள்ளார்கள். ஒரு பகுதியினர், இளைப்பாற விண்ணப்பித்துள்ளனர். இதன்காரணமாக பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

டாக்டர்களின் செயல்கள் எவ்வாறு எமது சமுதாயத்தின்ஆரோக்கியவாழ்விற்கு பாதகமாகவுள்ளதோ அதைவிட மோசமாக எதிர்கால சந்ததியின் வாழ்வே இந்த ஆசிரியர்கள் வெளியேற்றத்தால் பாதிப்படையக் கூடும்.

சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு இனப்படு கொலைகளையும், தமிழரின் பொருளாதாரத்தையும் அழித்துவரும் வேளையில், வெளியேறும் ஆசிரியர்களினது பொறுப்பற்ற செயல்கள் மேலும் சமுதாயத்தை பலவீனப்படுத்துவதாகவும் உள்ளது.

இந்த ஆசிரியர்கள் தமிழரின் விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகியபோது தீவிரமான கருத்துக்காவுபவர்களாக இருந்தவர்கள். விடுதலை பற்றிப் பெரியளவில் பேசிக்கொண்டவர்கள். விடுதலை பற்றிய கருத்துக்களை மக்களுக்குள் பரப்பிய இவர்கள்; ''மிதவாதத் தலைமை''களுக்குப் பின்னால் பலமாக நின்றவர்கள்.

ஆனால் இவர்கள் விடுதலைப் போராட்டத்தில் எதிரியை வெல்வது இவ்வளவு கடினமானதாக இருக்கும் என எண்ணவில்லைப்போல் தெரிகின்றது. ''மிதவாதத் தலைமைகள்'' வாய்ப்பேச்சினால் தமிழீழம் பெற்று விடலாம் என்பதை இவர்கள் முழுமையாகவே நம்பியுள்ளார்கள் போலும் தெரிகின்றது. அல்லாவிடில் தமிழீழ கருத்துக்கள் பரவக் காரணமாக இருந்தவர்கள் இன்று இன்னல் வந்த பொழுது ஓடுவதேன்?

சிங்கள அரசாங்கத்தின் பேரினவாதப் போக்கால் தனியாக டாக்டர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ இன்னலோ, அவமானமோ வரவில்லை. முழுச் சமுதாயத்திற்கும் முழு இனத்திற்குமே இன்னலும் இழிவும் வந்துள்ளது. இதனைப் பொறுத்துக் கொள்ள சமூகப் பொறுப்புடன் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். அதைவிடுத்து பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் தப்பிக் கொள்வது அவர்கள் சமூகத்திற்கு இழைக்கும் துரோகமாகும்.

இந்த நிலைபற்றி, எங்கள்' கல்வி முறையில் ஏதோ ஒரு குறை இருக்கின்றது. மாணவர்கள் உள்ளத்தில் நாட்டுப்பற்றை, தொண்டுள்ளத்தை ஊட்ட இது தவறி விட்டது. கற்றவர்கள் மக்களுக்குச் சேவை செய்கிறார்கள் இல்லை என பேராசிரியர் துரைராசா குறிப்பிட்டமை மிகவும் பொருத்தப்பாடு உடைய ஒரு கூற்றாகும்.

ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் போதே அந்த மக்களின் நாட்டுப்பற்றும் எழுச்சியும் வெளிப்பட்டு சுதந்திர நாடுகள் உருவாகின. இங்கு அவ்வாறான நிலை உருவாகவில்லை என்றால் அதன் குறைபாடு அவர்கள் பெற்ற கல்வியில்தான் உள்ளது என்பதில் சந்தேகமில்லை.

# உதிக்கும் திசைநோக்கி

## உன்னத பயணம்

(17)

திரு. கருணா அவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியற் பொறுப்பாளர் திரு கரிகாலன் அவர்கள் வந்து சேர்ந்தார். அதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் திரு. மாத்தயாவுடன் மட்டக்களப்பு நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடினர். பல்வேறு முக்கியஸ்தர்களும் வந்து மாத்தயாவைச் சந்தித்தனர் அகதிகள் பற்றிய விடயங்களைக் கேள்வியுற்ற திரு. மாத்தயா இந்த விடயங்களை திரு. கிட்டு அவர்களுக்கு தெரியப்படுத்தி, அவர் மூலமாக இந்த விடயங்களை வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டார். அத்துடன் அகதிகளின் நிலைமையை வீடியோவினாலும், புகைப்படக் கமராவினாலும் படமெடுத்து அவர்களின் அவலத்தைஏனையமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் உதவிகள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கூறினார்.

மாத்தயாவின் வேண்டுகோளின்படி 2-10-90 அன்று பிற்பகல் 4மணியளவில் அகதிகளின் நிலையைப் படமாக்கவும், அவர்களைப் பேட்டி கண்டு நிலைமைகளை அறியவும் ஒரு குழு புறப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் இக்குழுவுக்குத் தலைமை தாங்கினார். லான்ட் குறோசரில் புறப்பட்ட இக்குழுவுடன் நானும் தொற்றிக் கொண்டேன் முதலில் வந்தாறுமூலையிலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள பொத்தானை வடிச்சல் என்னும் பகுதியை அடைந்தோம். பொத்தானை என்னும் பகுதியில் உயரமானபகுதி பொத்தானைத்திடல் என்றும் அங்கிருந்து மழைநீர் வடிந்து ஆற்றுடன் சேரும் இந்தப் பகுதி பொத்தானை வடிச்சல் என்றும் அழைக்கப்படும் என அறிந்துகொண்டோம்,

அங்கே புதிதாகக் குடிசைகள் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பலர் காட்டை வெட்டி துப்பரவு செய்து கொண்டிருந்தனர். அகதிகளாக வருவோர் தண்ணீர் வசதியைக் கருத்திற்கொண்டு ஆற்றங்கரைகளை அண்டிய பகுதிகளாக தமது குடியிருப்புக்களை அமைத்துக்கொள்கிறார்கள் என்பதை உணர முடிந்தது. ஒரு வெட்டவெளியில் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. முடி நரைத்து முகம் காய்ந்த, ஒரு வயோதிபர் அங்கே காணப்பட்டார். மரநிழலில் ஒரு குழந்தை நிர்வாண நிலையில் படுத்திருந்தது. குழந்தை படுத்திருந்த சூழலை அவதானித்தேன். சாப்பாட்டில் ஈக்கள் மொய்த்துக் காணப்பட்டன. வயோதிபரிடம் ''நீங்கள் எந்த ஊர் என்று கேட்டேன்.'' குடிசை அமைக்கும் வேலையைத் தொடர்ந்தவாறே 'வந்தாறு மூலை'' என்றார். அவர்களின் நிலையைப் பார்த்த நான் அவர்களைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. அங்கிருந்த ஒரு இளைஞரிடம் இங்கு எத்தனை குடும்பங்கள் உண்டு? என்றேன். ''பதினைந்து'' என்றார். காடும் பற்றைகளும், ஆறும் சேர்ந்த இந்த இடம் நுளம்புகளின் உற்பத்தி ஸ்தாபனம் ..க



பிறக்க முன்னரே தந்தையை இழந்த, கிழக்கின் அவலத்துக்குச் சாட்சியான இக் குழந்தை தன் தாயுடன்...

விளங்கும். இங்கு எப்படித்தான் இருக்கப்போகிறார்களோ? என்று நினைத்தபடியே புறப்பட்டேன். அப்போது எனக்குத் தெரியவில்லை. இது சாதாரண காட்சி. இனிக் காணப்போகும் காட்சிகள் இதைவிட அவலமான காட்சிகள் என்று'

சாரதியின் ஆசனத்தில் இருந்த கரிகாலனிடம் சென்றேன். இந்த இடத்தில் இப்படி இருக்கின்றார்களே இங்கு மலேரியா போன்ற நோய்கள் தொற்ற வாய்ப்பு உண்டல்லவா? என்று கேட்டேன். ''இந்த நிலையைப் பரவாயில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இனிவரும் காலம் மழைக்காலமாகும் அந்தக் காலத்தில் இந்த மக்கள் இன்னும் துயரத்தைச் சந்திக்கப் போகிறார்கள்'' என்றுவேதனையுடன் கூறியவாறே லாண்ட்குறோசரை செலுத் தொடங்கினார்.

மைலவட்டவான் என்ற பகுதியை அடைந்தோம். தூரத்தில் இருந்து பார்த்த போது திருவிழாக் கூட்டம் போல் தெரிந்தது. எனக்கு புதினமாக இருந்தது. ஏனென்றால் நான் ஏற்கனவே இந்த வீதிகளால் பயணம் செய்தவன். வயல்வேலைகள் நடைபெறும் காலம் தவிர ஏனைய காலங்களில் இந்த வீதியில் சனநடமாட்டத்தைக் காண முடியாது. எப்போதாவது ஓரிரு சைக்கிள்கள் வரும். அப்படியான இந்தப் பகுதி சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. இதுதான் மைலவட்டவான் வேல்ட் மாக்கற் (உலகச்சந்தை) என்றார் கரிகாலன். பிரபலமான ஆலயத் திருவிழாவின்போது கடைகள் எவ்வாறு காணப்படுமோ அப்படியிருந்தது. வீதியின் இருமருங்கும் எண்ணற்ற கடைகள் முளைத்திருந்தன. சைக்கிள் கடைகள், ரொட்டிக் கடைகள், சலூன், மீன்- கருவாட்டுக் கடைகள், மரக்கறிக்கடைகள், பலசரக்குக் கடைகள் என பல கடைகளும் காணப்பட்டன. இந்தப் புதிய சந்தையை அண்டிய ஒரு குடிசையை நோக்கிப் போனோம்.

ஒருமாமரத்தின் கீழ் சிலர் இருந்தார்கள். அவர்களை நெருங்கினோம். கையில் கைக்குழந்தையுடன் ஒரு இளம் பெண் இருந்தார். வெறித்த பார்வை. ''அக்கா உங்கள் கணவர்எங்கே?'' என்றேன். நிமிர்ந்து பார்த்தார். கண்ணீர் பொலபொலவெனக் கொட்டியது. ''கொள்ளையில்போவானுகள் கொண்டு போயிட்டானுகளே'' என்று அருகில் இருந்த ஒரு கிழவி ஒல மிட்டாள். இவர்கள் ஏதோ விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதைஉடன்புரிந்து கொண்டேன். அந்தக் கைக்குழந்தையை கவனித்தேன். அதிர்ச்சியாக இருந்தது எனக்கு. பல சர்வதேச சஞ்சிகைகளில் பார்த்த அவலத்துக்கு எடுத்துக்காட்டான குழந்தைகளை ஒத்த தோற்றம் அந்தக் குழந்தையின் தோற்றம். மெலிந்து, கறுத்துபார்க்கப்பயங்கரமான, தலைக்கேற்றஉடல் அமையாத...அதை வார்த்தையில் வர்ணிப்பது கஷ்டம். எதியோப்பியாஅல்லது பயாவ்றாவில் தான் நிற்கிறோமோ என்று கூட எண்ணினேன். கிழக்கின் முழு அவலத்துக்கும் இந்தக் குழந்தையின் உருவம் ஒன்றே போதும் நானும் ஒரு குழந்தையின் தந்தை என்பதால்தானோ என்னவோ இந்தக்காட்சி என்னை மிகவும் பாதித்தது. அன்றிரவு முழுக்க அந்தக் குழந்தையின் தோற்றம் நெஞ்சைப் பிசைந்தது.

(தொடரும்)

# மாணவர் வரவு அதிகரிப்பு

# ஆசிரியர்கள் வரவில் மந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பாடசாலைகளில் இப்போது மாணவர்கள் வரவு அதிகரித்துள்ளது. ஆனால் ஆசிரியர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமுகம் தருவதில்லை. இதனால் வகுப்பறைகள் ஆசிரியர்கள் இல்லாமல் காற்று வாங்குகின்றன.

யாழ். நகரக் கொத்தணியில் மொத்தம் எட்டுப் பாடசாலைகள் உள்ளன. இதில் இரண்டு கன்னியர் பாடசாலைகளில் பள்ளிக்கூடம் ஆரம்பித்தும் அதிபர்கள் வரவில்லை. யாழ். மத்தியில் ஒரு பாடசாலையில் நாளொன்றுக்குச் சராசரி பதினைந்து ஆசிரியர்கள் சமுகம் தருவதில்லையாம். இவர்களில் உப அதிபர் உட்பட பல ஆசிரியர்கள் கொழும்பில் இருக்கிறார்கள். சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக இரண்டு வகுப்புக்களை ஒன்றிணைத்துக் கற்பித்தல் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன

இதே வேளை புதிய ஒய்வூதிய அலையால் கவரப்பட்ட பல ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலில் அக்கறை காட்டுவதில்லை என்று பெயரை வெளியிட விரும்பாத ஓர் அதிபர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## கொடுப்பனவுகள் பெறவரும் நோயாளர் குறைவாகவுள்ளது

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ் செயலகத்தில் வழங்கப்பட்டுவரும் புற்றுநோய், காசநோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான கொடுப்பனவைப்பெற்றுக்கொள்வதற்குச் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் வருகை தருவது குறைவாகவுள்ளதாக யாழ்ப்பாண சமூக சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், இந்தவாரம் வரைக்கும் நாம் கொடுப்பனவைச் செய்யவுள்ளோம். இந்தவாரத்திற்குள் தமக்குரிய பணத்தை பெற்றுச் செல்லாதோரின் கொடுப்பனவை நிறுத்தப் போவதாகவும், இந்தக் கொடுப்பனவுத் தொகையை வேறு பகுதிகளுக்குத் திருப்பி விடவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (லோ)

## காசோலைகள் திகதி மாற்றி வந்துள்ளன

(அராலி)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம் ஊடாக திகதிமாற்றுவதற்கென பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட காசோலைகள் திகதி மாற்றி வந்துள்ளதாகவும் காசோலைக்கு உரியவர்கள் உடனடியாக வந்து அவற்றை பெற்றுக்கொள்ளலாம் என்றும் பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி அறியத்தருகின்றார். (20)

## தோட்டக் காணிகள் பகிர்வில் எவருக்கும் முன்னுரிமையில்லை

தோட்டக்காணிகளைப்பகிர்ந்தளிப்பதில் எவருக்கும் முன் உரிமை வழங்கப்படமாட்டாது எனப் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

தொழிலாளர்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ சலுகைகள் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார். இதுபற்றித் தாம் தோட்டத் தொழிற் சங்கக் கூட்டு நிர்வாகக் குழுவிற்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால் அண்மையில் இரத்தினபுரிமாவட்டத்தில் எகலியகொடை, நிவிற்றிகலை, கலவான, அயகம, இரத்தினபுரி போன்ற பகுதிகளில் உள்ள காணிகள் சிங்களவர்களுக்கு மட்டுமே பகிர்ந்தளிக்கப்பட்டன தமிழர்களுக்குக்காணிப் பங்கீட்டிற்கு என நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டாலும் அவர்களது விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பாவற்குளமுகாமில் இருந்து குடிமனைகள் மீது ஷெல் வீச்சு

(வவுனியா)

பாவற்குளம் இராணுவ முகாமிலிருந்து தமிழ் மக்கள் இருக்கும் பகுதிகளை நோக்கி ஷெல்தாக்குதலும்துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக ராஜேந்திரன் குளம் பகுதியில் உள்ள குடும்பங்கள் இடம் பெயர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

ராஜேந்திரன் குளம் பாடசாலை, இராணுவத்தினரின் தாக்குதலினால் பாரதி புரம் என்னும் கிராமத்தில் உள்ள கட்டடப்பகுதி ஒன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது. (தி)

தமிழ் போராளிகளை
ணைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

தமிழகத்தில் சட்டமும், ஒழுங்கும் மீறப்படுவது தொடர்பாக தான் தமிழக முதல்வர் மு. கருணாநிதியுடன் தொடர்புகொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

கொழும்பு
தற்போது கொழும்பு விடுதிகளில் தங்குவதற்கு அதிக வாடகைப்பணம் கொடுக்க வேண்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் காரணங்களினால் ரயில் மூலம் வவுனியாவிற்கு வந்து சேரும் வடபகுதி மக்களில் பலர் கால்நடையாக பூந்தோட்டம் பகுதிக்கு வருவதை காணக்கூடியதாக உள்ளது. (தி)

ஆஸ்பத்திரியில்
கள் மருந்து எதுவும் இல்லை என கைவிரித்தனராம். இதனால் பலத்த ஏமாற்றமடைந்த நோயாளருக்கு வெளியில் வாங்கும்படி ஆறுதல் கூறினராம்.

இனி மருந்து கிடைக்கும் பட்சத்திலேயே நோயாளருக்கு வழங்க முடியுமென வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

தி. மு. க.
தில்லை என தெரிவித்தார்.

மேலும் இந்திய கிழக்குப் பிராந்தியத் தளபதி அட்மிரல் ராமதாஸ் மரபுகளை மீறி தமிழ்நாட்டு அரசாங்கத்தின் மீது குற்றஞ் சாட்டியமையும் இவற்றின் பின்னணியே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## "வேங்கைகளின் விடுதலை வேதங்கள்"

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினரால் புதிய ஒலிப்பதிவு நாடாஒன்று வெளியிடப்படவிருக்கிறது. "வேங்கைகளின் விடுதலை வேதங்கள்" என்ற இந்த ஒலிப்பதிவு நாடா தமிழீழத்தின் பிரபல கலைஞர்களின் பங்களிப்புடன் உருவாகியுள்ளது

எதிர்வரும்செவ்வாய்க்கிழமை உரும்பிராயில் நடைபெறும்

இவ் வெளியீட்டு விழாவில் தமிழீழத்தின் பிரபல கலைஞர்களும், மக்கள் முன்னனி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

## பணமாகச் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான், மண்டைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஆசிரியர்களுக்குரிய சம்பளம் பணமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மின்சார
இப்பகுதி சென்று தொடர்பை ஏற்படுத்த முடியாதவாறு நிலத்தின்கீழ் மிதிவெடிகளைப் புதைத்து வைத்துள்ளனர் என்று தெரிவித்தார்.

தமிழ்ப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதில் அரசும், அரச அதிகாரிகளும் அக்கறையீனமாகக் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி)

மடு
அவதானிக்க முடிகிறது.

அரசபடையினர் வான் மூலம் எந்தச் சமயத்திலும் இந்த அகதி முகாமை நோக்கி தாக்குதலை மேற்கொள்ளலாம் என்று அகதி மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகிறது. (தி)


# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
# யாழ்ப்பாண கல்விக் கோட்டம்

யாழ்ப்பாண கல்விக் கோட்டப் பிரிவில் உள்ள சகல தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும், பிரத்தியேக வகுப்புகளுக்குரிய ஆசிரியர்களும் 19-11-90 பிற்பகல் 3 மணிக்கு கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிறுவனத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பொறுப்பாளர்கள்
யாழ்ப்பாண கல்விக்கோட்டம்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்.

(B/1607)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தோட்டப் பாடசாலை ஆசிரியர் சேவை

## ஓய்வூதியத் திட்டம் நடைமுறையில் இல்லை

(யாழ்ப்பாணம்)

தோட்டப்பாடசாலைகளுக்குரிய ஆசிரிய சேவையையும் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவதென அரசு தீர்மானித்த போதிலும் அது நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மகஜர் ஒன்றை அரசுக்குச் சமர்ப்பிக்க உள்ளது.

இந்த மகஜரில் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களின் விபரங்களை இணைத்துக் கொள்வதற்கு வசதியாக எதிர்வரும் செவ்வாய்க் கிழமை மாலை 2.00மணிக்கு தமழர் ஆசிரியர் சங்கத்தின் பணிமனையில் கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இச்சங்கம் கேட்டுள்ளது. (அ)

வருமான
கமாக திருத்தப்பட்டு இவ் விசேட நிவாரணம் வழங்கப்பட்ட பின்னர் மீண்டும் தற்போதைய நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படும்.

அரசாங்க அதிபர் பல்வேறு அரச உயர் அதிகாரிகளைச் சந்தித்து பல முக்கிய விடயங்களைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளார்.

பணம்:-

இங்கு பணப் புழக்கத்தை அதிகரிக்கச் செய்ய வசதியாகவும், சகல திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களுக்கும் தேவையான அளவு பணத்தின் விநியோகத்திற்காகவும் ஒரு மாதத்திற்கு இங்கு எடுத்துவரப்படும் பணம் ஐந்து மில்லியனில் இருந்து ஐம்பது மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்பணம் இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கிக்கு பணம் வரவில்லை. ஒரு சில திணைக்களங்களுக்கு சம்பளப் பணம் வந்து சேர்ந்துள்ளது.

மின்சாரம்:-

தற்போது தடைப்பட்டிருக்கும் மின் விநியோகத்தைச் சீராக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதிக்கும், மின்சாரசபைத் தலைவருக்கும் அரசாங்க அதிபர் எடுத்துக் கூறியுள்ளார். மாங்குளம் பகுதியில் தற்போது பழுதடைந்திருக்கும் மின் கேபிள்களை திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக மின்சாரசபைத் தலைவர் உறுதியளித்துள்ளார். இச் சந்திப்பின் போது மின்மாற்றிக்குரிய எண்ணெய்

பற்றாக்குறை பற்றியும் அரச அதிபரால் பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும் திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

மருந்து:-

அரச, தனியார் வைத்திய சாலைகளுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை இங்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு தட்டுப்பாடு நிலவும் ஒரு தொகுதி அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் நாளை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் "லிங்கோ ரேடர்" என்ற கப்பலில் வர இருக்கிறது.

விவசாய உரம்:-

விவசாயத்துக்குத் தேவையான "யூரியா" தவிர்ந்த ஏனைய உரங்களை தனியார் துறையினர் இங்கு எடுத்து வருவதற்கு அரச அதிபரால் அனுமதி பெறப்பட்டுள்ளது.

தனியார் துறையினரும் விசேட அனுமதிப்பத்திரம் பெற்றே இவ்வுர வகைகளை இங்கு எடுத்துவரலாம். விவசாயத் திணைக்களம் உரவிநியோகத்தை மேற்கொள்ள மாட்டாது.

இதேவேளை 'யு. எஸ். எயிட்' ஸ்தாபனம் ஒரு தொகுதி விவசாய விதைப் பொருள்களையும் உர வகைகள் சிலவற்றையும் கப்பல் மூலம் இங்கு எடுத்து வர உதவ இருக்கிறது என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் சில வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் சென்று இங்குள்ள நிலைமை பற்றி தான் எடுத்துக் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்



## திரு. அரியகுட்டி அப்பையா

அளவெட்டி வடக்கு, திரு. அரியகுட்டி அப்பையா (ஒய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று சிவபதம் எய்தினார். இவர் அரியகுட்டி பார்வதி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரமசாமி, சரவணமுத்து, காயத்திரி, நடராசா ஆகியோரின் சகோதரரும், இரவீந்திரன் (நியூசிலாந்து), புனிதராணி (ஜேர்மனி), மகேந்திரன் (ஜேர்மனி), புனிதமலர் (ஜேர்மனி), குலேந்திரன் (ஜேர்மனி), நிமலேந்திரன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசந்திரேஸ்வரி (நியூசிலாந்து), சபாரத்தினம் (ஜேர்மனி), சந்திரமலர் (ஜேர்மனி), இராஜேஸ்வரன் (ஜேர்மனி), தேனுகா (ஜேர்மனி), சூரியகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபாஜினி, சுடரோன், மைவிழி, பாவை, பிங்கலை, மேகலை, தனுஷன், கௌரியன், அயிலவன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 18-11-90 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கேணிப் பிட்டிமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அளவெட்டி வடக்கு, ந. உருத்திரன்
(R/850)